NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 7 April 2022

# என்யுஎஸ், என்டியு ஆசியாவில் சிறந்த பல்கலைக்கழகங்கள்

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகமும் (என்யுஎஸ்) நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகமும் (என்டியு) பல்கலைக்கழகங்களுக்கான உலகத் தரவரிசையில் ஆசிய அளவில் முதல் இரண்டு இடங்களைப் பிடித்துள்ளன.

பிரிட்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'குவாக்குவ ரெல்லி சைமண்ட்ஸ்' எனும் உலகப் பல்கலைக்கழகங்களுக்கான தர வரிசைப் பட்டியல், பல்கலைகள் வழங்கும் பாடத்திட்டங்களின் அடிப்படையில் அவற்றைத் தர வரிசைப்படுத்துகிறது. நேற்று வெளியான அண்மைத் தரவரிசைப் பட்டியலில் என்யுஎஸ்ஸின் 16 பாடத்திட்டங்களும் என்டியுவின் ஏழு பாடத்திட்டங்களும் முதல் பத்து இடங்களில் இடம்பெற்றுள்ளன.

பொறியியல், ஆய்வு ஆகிய துறைகளில் இரண்டு பல்கலைக்கழகங்களும் இந்தத் தனிச்சிறப்பைப் பெற்றுள்ளன.

ஹாங்காங், சீன, ஜப்பானிய பல்கலைக்கழகங்களின் முறையே ஏழு, நான்கு, மூன்று பாடத்திட்டங்களும் முதல் பத்து இடங்களில் உள்ளன.

ஆசியாவிலேயே சிறந்த உயர் கல்வி முறை சிங்கப்பூரில் இருப்பதாக ஆய்வில் குறிப்பிடப்பட்டது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 1,543 பல்கலைக்கழகங்களில் 376 ஆசியாவைச் சேர்ந்தவை.

உயர்கல்விக்கான உலகத் தர வரிசையில் அமெரிக்கா, பிரிட்டன், சுவிட்சர்லாந்து ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக சிங்கப்பூர் நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.